**சார்பு நீதிமன்றம், செஞ்சி**

**அ.வ.எண்.223/2022** **நாள்.11.12.2024**

2024-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 11-ம் நாள் வாதி தரப்பு **1ம்** சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வெங்கடேசன் | தொழில் | |
| த.பெ/க.பெ. | ஏழுமலை | சாதி | |
| கிராமம் | செஞ்சி | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 62 |

**வா.சா.1**

**குறுக்கு விசாரணை**

நான் முன்பு வெளிநாட்டில் வேலைபார்த்தேன். தற்போது எந்த வேலையும் செய்யவில்லை. எனது சொந்தஊர் சிங்கவரம். எனக்கு நிலங்கள் சிங்கவரத்தில் உள்ளது. எனக்கு நிலத்திலிருந்து வருமானம் வருகிறது. பங்குவர்த்தகத்தில் முதலீடு செய்துள்ளேன். இத்துடன் லேவாதேவி கொடுத்துவருகிறீர்கள் என்றால் இல்லை யாராவது கேட்டால் கொடுப்பேன். இந்த வழக்கு இல்லாமல் வேறு புரோநோட்டு வழக்குகள் நடத்திவருகிறேன். பிரதிவாதி முபாரக் சிங்கவரம் போகும் வழியில் குடியிருந்து வருகிறார். அவர் பங்குவர்த்தகத்தில் முதலீடு செய்யவில்லை. பிரதிவாதியும் நானும் ஒரே ஊர் என்பதால் பழக்கம். உங்கள் ஊரில் சிங்கவரத்தில் உங்கள் நிலத்திற்கு பக்கத்தில் பிரதிவாதிக்கு நிலங்கள் உள்ளதா என்றால் இல்லை. நான் செஞ்சியில் ராஜேந்திரன் நகர் முதல் தெருவில் குடியிருந்து வருகிறேன்.

நான் குடியிருக்கும் தெருவில் பிரதிவாதி முபாரக்கிற்கு வீடு இல்லை. முபாரக்கின் குடும்ப விபரங்கள் தெரியுமா என்றால் அவரது தம்பி பார்த்துள்ளேன் மற்றபடி அவர் குடும்பவிபரம் எனக்கு தெரியாது. அவரது தம்பியின் பெயர் எனக்கு ஞாபகமில்லை. அவர் தம்பி என்னிடம் எதுவும் கடன் வாங்கவில்லை. அவர் தம்பி என்ன வேலை பார்க்கிறார் என்று எனக்கு தெரியாது. பிரதிவாதி முபாரக் வாரசந்தையை நிர்வாகம் செய்துவருகிறார். பிரதிவாதி முபாரக்கின் சித்தப்பா ஷாஜகான் என்பவரை தெரியும். அவரும் வாரசந்தையை நிர்வாகம் செய்துவருகிறார். ஷாஜகானும் போகவர பழக்கம். அவர் தற்போது இறந்துவிட்டார். பிரதிவாதி முபாரக் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை நான் படித்துபார்த்தேன்.

அந்த ஆட்சேபணைக்கு பிறகு உங்கள் வழக்கில் வழக்குமூலம் இல்லை என்பதால் அதை தள்ளுபடி செய்ய மனு தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். அந்த மனுவுடன் தாக்கல் செய்துள்ள வாரசந்தை சம்மந்தமான 2 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ள விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. முபாரக் வாரச்சந்தை நடத்துவதற்கு முன்பு அவரது சித்தப்பா ஷாஜகான் தான் வாரசந்தை நிர்வாகம் செய்துவந்தார் என்றால் சரிதான். மேற்படி வாரசந்தை

வக்பு வாரியத்திற்கு சொந்தமானது என்றால் அது எனக்கு தெரியாது. ஆட்சேபணையை நான் படித்துபார்த்தேன். அந்த எதிர்வழக்குரையில் வாரசந்தை நடத்துவதில் சுணக்கம் ஏற்பட்டதால் 28.11.2014ல் உறுப்பினர்கள் சேர்ந்து வெளிநபர்களிடம் கடன் வாங்கி நிர்வாகம் செய்யவேண்டியது என தீர்மானம் போடப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி தீர்மானத்தில் அதில்கண்ட உறுப்பினர்கள் அனைவரும் வெளிநபர்களிடம் கடன் வாங்குவதற்காக வெற்றுபாண்டில் கையெழுத்துபோட்டார்கள் என்றால் சரிதான்.

முபாரக்கும் அதில் ஒரு உறுப்பினர் என்றால் சரிதான். உறுப்பினர்கள் எல்லாம் கையெழுத்து போட்டுகொடுத்த பின்னர் ஷாஜகான் கையாடல் செய்து பல லட்சம் கடன் வாங்கி மோசடி செய்துள்ளார் என்பதால் அதுகுறித்து வக்பு வாரியத்தில் 02.03.2013 தேதியில் பிரதிவாதி புகார் கொடுத்தார் என்றால் புகார் கொடுத்திருக்கலாம் எனக்கு தெரியாது. மேற்படி சங்கதி குறித்து நீங்கள் மறுத்து பதில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்துதான் கையெழுத்து செய்தேன். பிரமாண வாக்குமூலத்தில் ரூ.1,50,000 கடன் பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது தட்டச்சு செய்தபோது ஏற்பட்ட பிழை.

வா.சா.ஆ-1ல் சாட்சி கையொப்பம் செய்த ஏழுமலை என்பவர் எனது ஊரை சேர்ந்தவர் எனக்கு தூரத்து உறவினர். மாமன் மச்சான் உறவுமுறை ஆவார். வா.சா.ஆ-1 பூர்த்தி செய்தவர் எனது நண்பர். அவர் செஞ்சியை சேர்ந்தவர். இந்த வழக்கு முபாரக்கிற்கு எதிராக தாக்கல் செய்வதற்கு முன்பு வழக்கறிஞர் அறிவிப்பு முபாரக்கிற்கு அனுப்பினீர்களா என்றால் இல்லை. வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பாததற்கு உங்கள் பிராதிலும், பிரமாண வாக்குமூலத்திலும் எந்த விளக்கமும் கூறவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வாக்குமூலத்திலும், பிராதிலும் பிரதிவாதியிடம் எந்தெந்த தேதிகளில் சந்தித்து கடனை திருப்பிதருமாறு கேட்டேன் என குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். உங்கள் பிராதில் பிரதிவாதி தொழில் செய்துவருகிறார் என குறிப்பிட்டுள்ளீர்கள் ஆனால் என்ன தொழில் செய்துவருகிறார் என குறிப்பிட்டு கூறியுள்ளீர்களா என்றால் இல்லை.

பிரதிவாதியுடன் எப்போதும் இஸ்மாயில் என்பவர் உடனிருப்பார் அவரை தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதியுடன் உள்ளூரில் இருப்பவர்களில் யாரையாவது தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதி எவ்வளவு நாட்களுக்கு முன்பு பணம் கேட்டார் என்றால் 2019 ஆகஸ்ட்டிலிருந்து என்னிடம் பணம் கேட்டிருந்தார். பணம் கேட்டபோது அவர் மட்டும் தான் வந்தார். அவர் பணம் கேட்கும்போது உங்களுடன் யார் இருந்தார் என்றால் நான் மட்டும் தான் இருந்தேன். முபாரக் குடும்ப விசேஷங்களில் நீங்கள் கலந்துகொண்டிருந்தீர்களா என்றால் இல்லை. உங்கள் குடும்ப விசேஷங்களில் அவர் கலந்துகொண்டுள்ளாரா என்றால் என் வீட்டு கிரகபிரவேசத்திற்கு வந்தார். 2019ல் தை மாதம் நான் வீடு கிரகபிரவேசம் வைத்தேன்.

பிரதிவாதி 5.09.2019ல் என்னிடம் கடன் வாங்கியதாக நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அதன் தமிழ்மாதம் எனக்கு தெரியாது. உங்களுக்கும் முபாரக்கிற்கும் எந்த பழக்க வழக்கமும் இல்லை, கொடுக்கல் வாங்கலும் இல்லை. ஷாஜகான் தான் உங்களுக்கு பழக்கம் அவர் முபாரக்கின் கையொப்பத்தை வெற்றுதாளில் பெற்றுவைத்திருந்ததை உங்களுக்கு வேண்டிய ஆட்களை வைத்து புரோநோட்டாக ஜோடனை செய்துகொண்டு பிரதிவாதி பேரில் பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள், தாவா புரோநோட்டிற்கும் எந்த மறுபயனும் கிடையாது, உங்களுக்கு இந்த வழககில் எந்த பரிகாரமும் கிடைக்ககூடியதல்ல என்றாலும், வழக்கு தள்ளுபடி

செய்யதக்கது என்றாலும் சரியல்ல.

(என்னுடைய நிரூபண வாக்குமூலத்தையும் ஆவணங்களையும் ஏற்று தாவாப்படி தீர்ப்பளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்).